**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**அசல் வழக்கு எண்.138/2025**

**இ.ம.எண்.3/2025**

வேல்முருகன் ...**மனுதாரர்/1ம் பிரதிவாதி**

**/எதிர்/**

சீத்தாலட்சுமி ...**எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 04.06.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.காஜாமொய்தீன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9, விதி 7 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் 1ம் பிரதிவாதியாவார். மேற்படி வழக்கின் வாய்தா, கடந்த 25.10.2025 தேதியன்று போடப்பட்டிருந்தது. அன்றையதினம் மனுதாரர் தனது உறவினர் வீட்டில் விசேஷம் நடந்ததால்

வெளியூர் சென்றுவிட்டதால் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் ஆஜாராக முடியவில்லை. மேற்படி தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. அது மன்னிக்கத்தக்கதாகும். மேற்படி வழக்கில், மனுதாரர் மீதுள்ள கடந்த 25.10.2025 தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யாவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட, நஷ்டங்களும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மனுதாரருக்கு மேற்படி அசல் வழக்கில் நல்ல கட்சி உள்ளது. எனவே, இம்மனுதானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரை ஆட்சேபணையின் சுருக்கம்:**</u>

**3)** இம்மனு சட்டத்தின்படியும், நியாயத்தின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யும் தவறும் ஆகும். அவை இந்த எதிர்மனுதாரரால் குறிப்பிட்டு மறுக்கப்பட்டுள்ளது. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மனுவில் கடந்த 25.10.2025 அன்று மனுதாரர் தனது உறவினர் வீட்டு விசேஷத்திற்கு வெளியூர் சென்றுவிட்டதாகவும், அதனால் இந்நீதிமன்றத்தில் மனுதாரரால் ஆஜாராக இயலவில்லை என்று சொல்லியுள்ளதை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். அவை அனைத்தும் முற்றிலும் பொய்யாகும். மேலும், மேற்படி காரணத்தினால் இவ்வழக்கில் முறையாக மனுதாரர் ஆஜாராகாமல் இருந்து வந்துள்ளதாக சொல்லியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. முறையான காரணங்கள் இல்லாததால் இம்மனுவானது இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

<u>**தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:**</u>

**4)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**5)** இரு தரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**6)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், இந்த எதிர்மனுதாரர்/வாதி இந்த மனுதாரர் மற்றும் மற்றொரு நபருக்கு எதிராகவும் தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. மேலும், அசல் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், கடந்த 25.09.2025 அன்று, மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டுள்ளது.

**7)** மேற்படி அசல் வழக்கில் அழைப்பாணையைப் பெற்றுக்கொண்டும், இம்மனுதாரராகிய 1ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜாராகமல் இருந்ததால், கடந்த 25.09.2025 அன்று இம்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**8)** இருப்பினும், கடந்த 10.11.2025 அன்று இம்மனுதாரரால் மேற்படி அசல் வழக்கில், கடந்த 25.09.2025 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டி, இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், இம்மனுவுடன் மனுதாரர் தனது எதிர்வழக்குரையையும் தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**9)** இந்நிலையில், மனுதாரர் தரப்பில் கடந்த 25.10.2025ம் தேதியன்று மனுதாரர் தனது உறவினர் வீட்டு விசேஷம் என்பதால், வெளியூருக்கு சென்றுவிட்டபடியால் அன்றைய தேதியில் இந்நீதிமன்றத்தில் முறையாக ஆஜாராக முடியவில்லை என்றும், மேற்படி தவறு மன்னிக்கத்தக்கது என்றும், அது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு அதிகப்படியான கஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று வாதிடப்பட்டது. மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரால் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களாக இல்லை என்றும், எவ்வித காரணமும் இல்லாமல் இம்மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**10)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் கவனமுடன் பரிசீலனை செய்கையில், கடந்த 25.09.2025 அன்று, மேற்படி அசல் வழக்கில் அழைப்பாணையைப் பெற்றுக்கொண்டு இம்மனுதாரராகிய 1ம் பிரதிவாதி முறையாக நீதிமன்றத்தில் ஆஜாராகாமல், தோன்றாத்தரப்பினராக இருந்துள்ளார். எனவே, அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இம்மனுதாரர்/1ம் பிரதிவாதி மேற்படி அசல் வழக்கில், கடந்த 10.11.2025 அன்றே இம்மனுவையும் மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையையும் சேர்த்து தாக்கல் செய்து, மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள கடந்த 25.09.2025 தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**11)** இவ்வாறு இருக்கும் நிலையில், மனுதாரர் தனது மனுவில் நீதிமன்றத்தில் இருந்து தான் அழைப்பாணையைப் பெற்றுகொண்டதாகவும், அன்றைய தேதியில் வழக்கு முதல் விசாரணையில் தனது உறவினர் வீட்டில் விசேஷம்

என்பதால் வெளியூருக்கு சென்றுவிட்டபடியால் இந்நீதிமன்றத்தில் முறையாக ஆஜாராக முடியவில்லை என்று மனுதாரரால் கூறப்பட்டுள்ள காரணமானது இந்நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளத்தகுந்த காரணங்களாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதுமட்டுமல்லாமல், மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை தொடர்ந்து, எவ்வித தாமதமும் ஏற்படுத்தாமல் இம்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில், மேற்படி அசல் வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய இம்மனுவும், அதனுடன் சேர்ந்து 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**12)** எனவே, எவ்வித தாமதமும் இல்லாமல், 1ம் பிரதிவாதி/இம்மனுதாரரால் இம்மனுவும், மனுவுடன் சேர்ந்து மேற்படி அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ள இம்மனுதாரரின் நடவடிக்கையின் அடிப்படையில், மனுதாரரால் வழக்கு முதல் விசாரணையில் இந்நீதிமன்றத்தில் முறையாக ஆஜாராகவில்லை என்று கூறப்பட்டுள்ள காரணமானது ஏற்றுக்கொள்ளதக்க மற்றும் நம்பத்தகுந்த காரணமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதுமட்டுமல்லாமல், மனுதாரர் தரப்பில் எவ்வித காலதாமதமும் ஏற்படவில்லை என்பதை மனுதாரரின் நடத்தை மூலம் தெரிய வருகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**13)** மேலும், இம்மனுவை அனுமதிப்பதன் மூலம் இந்த எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதுமட்டுமல்லாமல், இரு தரப்பினர்களுக்கும் மேற்படி அசல் வழக்கில் தகுந்த வாய்ப்புகள் அளிக்காமல் இரு தரப்பினர்களுக்கும் இடையேயுள்ள பிரச்சினை குறித்து தீர்வு கண்டு முறையாக நீதி பரிபாலனம் வழங்கமுடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு மேற்படி

அசல் வழக்கை எதிர்கொண்டு மேல்நடத்த வாய்ப்புகள் வழங்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவு:**

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. கடந்த 25.09.2025 தேதியிட்ட மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவானது இதன்மூலம் நீக்கரவு செய்யப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.06.16 16:18:16 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – **இல்லை**

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – **இல்லை**

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.06.16 16:18:22 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**